17

# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 910/2016/ ந

ஆணை எண். 154/2016

நாள் : 03/10/2016

பல்லவபுரம் நகர் குடியிருப்போர் நல வாழ்வு சங்கங்களின் இணைப்பு மையம், – மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி, – எதிர் மனுதாரர்

## ஆணை

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் மற்றும் விதிகளின்படி பல்லவபுரம் நகர் குடியிருப்போர் நல வாழ்வு சங்கங்களின் இணைப்பு மைய நிர்வாகிகளின் பல்வேறு கோரிக்கைகளடங்கிய முறையீடு குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் மேற்படி இணைப்பு மைய நிர்வாகிகள் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோரிடம் 23.08.2016 அன்று விசாரணைகள் நடத்தப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

2. நகராட்சியினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சில அடிப்படை தேவை தொடர்பான பணிகளை விரைந்து மேற்கொண்டிடவும், நடவடிக்கை விவரங்களை மேற்படி மையத்திற்கு தெரிவிக்கவும் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மேற்படி மையத்தின் நீண்ட நாள் கோரிக்கையில் ஒன்றான "ராதா நகர் சுரங்கப்பாதை அமைத்தல் மற்றும் வைஷ்ணவா கல்லூரி லெவல் கிராசிங் சுரங்கப்பாதையை கனரக வாகனங்கள் செல்லும் சுரங்கப் பாதையாக அமைத்தல்" தொடர்பான பணிகளை துரிதப்படுத்திட ஆவன செய்யுமாறு மேற்படி இணைப்பு மைய நிர்வாகிகளால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. இப்பொருள் குறித்து பல்லவபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கை கோரி பெறப்பட்டது. மேற்படி அறிக்கையில் ராதா நகர் சுரங்கப்பாதை தற்போது ஒருவழி LUS (Limited Use Subway)-ஆக 3.5 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளதெனவும் ராதாநகர் குடியிருப்போர் மற்றும் கடை உரிமைதாரர்கள் சிலர் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுதாகக் கூறி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை பெற்றுள்ளதாகவும் தற்போது அதே நிலை தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4.மேலும் L 26 வைஷ்ணவா கல்லூரி அருகில் LUS அமைக்க நெடுஞ்சாலைத்துறை (Metro wing) மூலம் தென்னக இரயில்வே துறைக்கும் பிரேரணை அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இரு சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டால் இப்பகுதியில் போக்குவரத்து பிரச்சினை ஏதும் இருக்காதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.பல்லவபுரம் நகர் மன்ற தீர்மானம் எண்.12, நாள் 24.11.2011ல் நிறைவேற்றப்பட்ட பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கான சுரங்கப்பாதை(ராதா நகர்) அமைத்திட வேண்டுமென்ற நிலைப்பாட்டினை மாற்றி பாதசாரிகள் மற்றும் மிதிவண்டிகள் மட்டும் செல்லும்படியாக சுரங்கப்பாதை அமைக்கவும். வைஷ்ணவா கல்லூரி லெவல் கிராசிங்(எல்.சி.எண்.26) சுரங்கப்பாதையை கனரக வாகனங்கள் செல்லும் சுரங்கப்பாதையாக அமைக்கவும் தேசிய நெடுஞ்சாலைத் துறையை கேட்டுக்கொள்ள நகர மன்ற தீர்மானம் (எண்.797, நாள் 8.07.2016) இயற்றப்பட்டு கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை கோட்டம்–4 அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பல்லவபுரம் நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. பல்லவபுரம் நகர் வாழ் பொது மக்களது நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிட ஏதுவாக இப்பொருட்கள் குறித்து தனிக்கவனம் செலுத்தி தக்க துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு ஆவன செய்யுமாறு கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை கோட்டம் – 4 அவர்களை இம்முறை மன்ற நடுவர் 09.09.2016 நாளிட்ட அறிவிப்பாணையின் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், பல்லவபுரம் நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண்.1800/16/இ3, நாள் 21.09.2016ல் தக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்பொருள் குறித்த இம்முறைமன்ற நடுவத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை. இருப்பினும், பொது மக்கள் நலன் கருதி இப்பொருள் குறித்து தொடர்ந்து கண்காணித்து உரிய ஒருங்கிணைப்பு பணிகளை உறுதி செய்து கொள்ளுமாறு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

4/11/2016

செயலாளர்.

பெறுநர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
குரோம்பேட்டை, சென்னை – 44.

தலைவர் / செயலாளர்,
பல்லவபுரம் நகர் குடியிருப்போர்
நல வாழ்வு சங்கங்களின் இணைப்பு மையம்,
பிளாட் எண்.66, 2–வது குறுக்குத் தெரு,
ஏஜிஎஸ். காலனி, குரோம்பேட்டை, சென்னை –44.

நகல்

1. கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை,
   சென்னை கோட்டம்–4,
   சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்,
   ஆலந்தூர், சென்னை – 16
2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   செங்கல்பட்டு மண்டலம், காஞ்சிபுரம்.